# அறந்தாங்கி நகராட்சி
# நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## 2022–ம் ஆண்டு சுபகிருது வருடம் ஆவணி மாதம் 14–ம் தேதி ஆகஸ்ட் 30.08.2022 செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்ட பொருள் விபரம்

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:1** | அறந்தாங்கி நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுலை–2022 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:–** பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:–** 96<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண்:2** | அறந்தாங்கி நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுலை–2022ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:–** பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:– 97**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண்:3** | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வந்த TN–55–B–5798 ஈப்பு வாகனம் 1997–ல் வாங்கப்பட்டதாகும், அவ்வாகனம் தற்பொழுது பயன்பாடு இல்லாத நிலையில் உள்ளதால் அவ்வாறு உள்ள வாகனங்களை நகராட்சி நிர்வாக இயக்குனரின் சுற்றறிக்கையின் படி கழிவிடை நீக்கம் செய்ய தெரிவிக்கப்பட்டிருந்ததை அடுத்து வாகனத்தினை கழிவிடை நீக்கம் செய்ய அரசின் வல்லுனர் குழுவின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டு தற்பொழுது வல்லுனர் குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே பரிந்துரையின் படி ஈப்பு வாகனத்தினை பொது ஏலத்தில் விட்டு கழிவிடை செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்:0660/2017/இ1) | **தீர்மான எண்:– 98**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:4** | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வந்த TNP–6974 லாரி கனரக வாகனம் 1988–ல் வாங்கப்பட்டதாகும், அவ்வாகனம் தற்பொழுது பயன்பாடு இல்லாத நிலையில் உள்ளதால் அவ்வாறு உள்ள வாகனங்களை நகராட்சி நிர்வாக இயக்குநனரின் சுற்றறிக்கையின்படி கழிவிடை நீக்கம் செய்ய தெரிவிக்கப்பட்டிருந்ததை அடுத்து வாகனத்தினை கழிவிடை நீக்கம் செய்ய அரசின் வல்லுனர் குழுவின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டு தற்பொழுது வல்லுனர் குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே பரிந்துரையின்படி லாரி கனரக வாகனத்தினை பொது ஏலத்தில் விட்டு கழிவிடை செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:1911/2010/இ1) | **தீர்மான எண்:– 99**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:5** | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனங்கள் பராமரிப்பு பணி மற்றும் தகுதிச்சான்று பெறுவதற்கான பழுதுகளை நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்:30 , நாள்:19.04.2022–ல் ரூ.5.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனுமதிக்கப்பட்ட செலவினத்தொகையில் TN–55–BY–5564 Tata Ace LCV வாகனத்தில் ஏற்பட்டுள்ள செல்ப் மோட்டார் சாலோன் சுன் பழுது நீக்கவும் மேலும் டைனமோ சர்வீஸ், கியர் பாக்ஸ் குட்டி டாப் மாற்றுதல்,வாட்டர் சர்வீஸ் மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 10.08.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்:– 100**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | J.P.S Benz Auto Diesel Works, அறந்தாங்கி | 6500.00 |
| 2. | ஸ்ரீ செல்வி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் , அறந்தாங்கி | 6350.00 |
| 3. | ஸ்ரீ ராகவேந்திரா மோட்டார்ஸ் , அறந்தாங்கி | 6200.00 |

**அலுவலகக் குறிப்பு:**

1. குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ ராகவேந்திரா மோட்டார்ஸ், அறந்தாங்கி நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்:03820/2022/எச்1)

**பொருள் எண்:6**

எதிர் வரும் பருவமழையால் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்த்திட நகராட்சி பகுதியில் உள்ள மழைநீர் வடிகால், கால்வாய்கள் , பாலங்கள், மற்றும் சிறுபாலங்கள் தூர்வாரி தூய்மை படுத்தும் இப்பணிக்கு பொக்லைன் , ஜெட்ராடிங் இயந்திரம் ஜே.சி.பி கிட்டாச்சி இயந்திரம் வைத்து செய்திடும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்:84, நாள்: 26.07.2022ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 11.08.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | கிட்டாச்சி 1 மணி நேரத்திற்கு | JCB 1 மணி நேரத்திற்கு |
|---|---|---|---|
| 1. | VST எர்த் ஒர்க்ஸ் , அறந்தாங்கி | ரூ.1900 | ரூ.1300 |
| 2. | நவ்ரின் எர்த் மூவர்ஸ் , அறந்தாங்கி | ரூ.1600 | ரூ.1200 |
| 3. | KSR சங்கரன் ரோடுவேஸ் , அறந்தாங்கி | ரூ.1500 | ரூ.1000 |

**அலுவலகக் குறிப்பு:**

1. குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள முளுசு சங்கரன் ரோடுவேஸ் அறந்தாங்கி, நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்:3494/2022/எச்1)

**தீர்மான எண்:– 101**

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:7** | இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 ன் கீழ், சூரியமூர்த்தி குளத்தின் அருகில் சிறுநீர் கழிப்பிடத்துடன் கூடிய பொது கழிப்பிடம் அமைக்க மதிப்பீடு ரூ.36.28 லட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்:18856,2022,தூஇதி, நாள்:13.07.2022–ன் கீழ் வரப்பெற்ற நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்க்கும்<br><br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதினை மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண்:– 102**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:8** | இந்நகராட்சி உதவி பொறியாளர் வகுப்பு 3 டிஜிட்டல் சைனிங் மற்றும் Encryption இரண்டு வருடத்திற்கு புதுப்பித்தல் செய்ய ஆகும் தொகை ரூ.4200/– ( ரூபாய் நான்காயிரத்தி இருநூறு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று செலவீனம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம் | **தீர்மான எண்:– 103**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண்:9** | இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொள்ள 04.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கூந்தாய்வு மேற்கொண்டதில் தொழில்நுட்ப தகுதியுள்ள கிழ்கண்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் அவற்றின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கும் | **தீர்மான எண்:– 104**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (நீர்நிலை மேம்பாட்டு பணிகள்) | | | | |
| 1. | மண்டிக்குளம் மேம்பாட்டு செய்தல் | 117.00 | Sun Constructions, Pudukkottai | 5.01% மதிப்பீட்டிற்கு அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி 5.01 % மதிப்பீட்டிற்கு அதிகம் அளித்துள்ள ஒப்பந்தகாரர் M/s sun Constructions, Pudukkottai அவர்கள் மதிப்பீட்டு விலைவிகிதத்தில் பணி செய்து தர சம்மத கடிதம் வழங்கி உள்ளதினை ஏற்று பணிக்கு வேலை உத்திரவு வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்:10**

அறந்தாங்கி நகராட்சியின் சார்பில் தமிழக முதல்வர் வருகை சிறப்பு மலர்களில் திட்டப்பணிகள் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்ட விபரப்படி நாளிதழ்களுக்கு உண்டான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ | நாளிதழின் பெயர் | பில் எண் | பில் நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தமிழ் முரசு | 3300358549 | 08.06.2022 | 10000.00 |
| | | | மொத்தம் | 10000.00 |

**அலுவலக குறிப்பு:–**மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.4141/2020/இ1)

**தீர்மான எண்:– 105**

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்:11</u>**

அறந்தாங்கி நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2021–22 ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் செயல்முறை உத்தரவு ந.க.எண்:27519/49/2021/P2 நாள்:13.08.2022–ன் கீழ் நிர்வாக அனுமதி வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | அரசின் மானியம் ரூ.லட்சத்தில் | பொது மக்கள் பங்களிப்பு தொகை ரூ.லட்சத்தில் | பங்களிப்புதாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | காரைக்குடி சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | ரூ. 29.50 | ரூ. 19.67 | ரூ. 9.83 | திரு.வி.பாலசுப் பிரமணியன் |
| 2 | புதுக்கோட்டை காரைக்குடி சாலையில் பயணியர் நிழற்குடை அமைத்தல் | ரூ. 9.90 | ரூ. 6.60 | ரூ. 3.30 | கனரா பங்க் |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மான எண்:– 106</u>**

<u>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது</u>

**பொருள் எண்:12**

இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 29.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் அவற்றின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கும்

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| பொது நிதி 22–23 | | | | |
| 1. | பேருந்து நிலையம் பொதுக்கழிப்பறை பழுது நீக்கம் செய்தல் | 4.95 | திரு.G.ராஜாராமன் ஒப்பந்ததாரர் | 1.05% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.நசுரூதீன் ஒப்பந்ததாரர் | 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1.மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.நசுரூதீன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:– 107**

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்:13**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் குடிநீர் பராமரிப்பு பிரிவு வாகனம் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் 46 நாள் 27.05.2022 ல் ரூபாய் 10.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது, மேற்கண்ட அனுமதிக்கப்பட்ட செலவீனத்தொகையில் TN-55-Z-7684 ஈப்பு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு கடந்த 25.07.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு.V. குணசேகரன்,<br>ஸ்ரீ காதம்பரி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>அறந்தாங்கி | ரூ.22,600/– |
| 2 | திரு.K.பாலு<br>ஸ்ரீ மணிகண்டன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>அறந்தாங்கி | ரூ.23,600/– |
| 3 | திரு.B.காசிலிங்கம்<br>ஸ்ரீ செல்வி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், அறந்தாங்கி | ரூ.23,700/– |

**அலுவலக குறிப்பு:**

1) குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.V.குணசேகரன், ஸ்ரீ காதம்பரி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், அறந்தாங்கி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை □□□□□□ ஏற்கலாம்.

2) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை□□□□ மன்றம்

**தீர்மான எண்:– 108**

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| **பொருள் எண்:14** | இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளை நகராட்சிகளின் பிரிவு–15ன் கீழ் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினங்களுக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்:– 109**<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பணியின் விபரம் | செலவினம் |
|---|---|---|---|
| 1. | Geo Ground water consultants, Chennai | Amrut 2.0 – Watersupply scheme 24*7 –Yield Test payment | 34650.00 |
| 2. | TamilNadu multipurpose indco service, Trichy | 2019–ம் ஆண்டு மழைநீர் சேகரிப்பு நோட்டீஸ் ஸ்டிக்கர் வாங்கி பயன்படுத்திய வகையில் | 57466.00 |
| 3. | திரு.செல்லமுத்து, மின்கம்பியாளர் | நாடிமுத்து OHT – மின்மோட்டர் உதிரிபாகங்கள் வாங்கியது | 1840.00 |
| 4. | Thiru R.Thomas, contractor | நகர்மன்ற கூட்ட அறையில் உள்ள குளிசாதனம் பெட்டி பழுது நீக்கம் செய்யப்பட்ட வகையில் அதற்குண்டான செலவினம் | 6000.00 |
| 5 | Thiru D.Meignanam Contractor | நாடிமுத்து நீரேற்று நிலையத்தில் உள்ள 10" வால்வு ராடு மற்றும் செக்நட்டு தயார் செய்த வகையில் செலவினம் | 4950.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | Thiru D.Meignanam Contractor | பெரியார் நீரேற்று நிலையத்தில் உள்ள 8" வால்வு ராடு மற்றும் செக்நட்டு தயார் செய்த வகையில் செலவினம் | 3900.00 | |
| 7 | Thiru.Radha, மின்கம்பியாளர் | குரூப் 4 தேர்வு நடைபெற்ற அரசுபள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் குடிநீர் வைக்கப்பட்ட வகையில் செலவினம் | 2100.00 | |
| 8 | Thiru K.P.Sathappan Contractor | வார்டு எண்.26 கோபாலசமுத்திரம் OHT உள்ள ஆழ்குழாய் கிணற்றில் Heavy Compressor மூலம் தூய்மை செய்யப்பட்ட செலவீனம் தொடர்பாக | 50000.00 | |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண்:15</u>** | **<u>நகர்மன்ற தலைவரால் கொண்டுவரப்படும் தீர்மான பொருள்:–</u>**<br><br>அறந்தாங்கி நகரத்தின் காவல் தெய்வமாக விளங்ககூடிய அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோவில் கும்பாபிஷேகம் வருகின்ற **08.09.2022** வியாழன் கிழமை அன்று நடைபெற உள்ளது. மேற்படி நிகழ்ச்சிக்கு உள்ளூர் விடுமுறை வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ,புதுக்கோட்டை அவர்களை இந்நகர்மன்ற தீர்மானம் மூலம் கேட்டுக் கொள்ள தீர்மானிப்பது தொடர்பாக. | **<u>தீர்மான எண்:– 110</u>**<br>**<u>தீர்மானம்:–</u>**<br>உள்ளூர் விடுமுறை விட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு நகர்மன்ற தீர்மானத்தின் மூலம் கேட்டுக் கொள்ள ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. |

ஒம்/–இரா.ஆனந்த்
தலைவர்,
அறந்தாங்கிநகர்மன்றம்.